# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/45 - 2019 ජනවාරි මස 25 වැනි සිකුරාදා - 2019.01.25

*2107/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக
அமைச்சர்.

கொழும்பு,
2019 சனவரி 24.

ஒழுங்குவிதிகள்

இந்த ஒழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்பட முடியுமென்பதுடன், 2019 சனவரி 28 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறுதலும் வேண்டும்.

2018 யூலை மாதம் 13 ஆந் திகதிய 2079/70 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி மற்றும் 2018 ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 2083/37 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி என்பவற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

**அ. வாகனம் வெளியேற்றும் மாசு தரங்கள்**

2. (அ) கீழுள்ள அட்டவணை I இன் III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து மோட்டார் வாகனங்களும் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2018.07.12 ஆந் திகதிய 2079/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூன்றாவது அட்டவணை அல்லது 2018.08.06 ஆந் திகதிய 2083/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஐந்தாவது அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட வாகனம் வெளியேற்றும் மாசு வரையறைகளுடன் ஒத்திசைதல் வேண்டும்.

(ஆ) எவ்வாறாயினும், வாகனம் வெளியேற்றும் மாசு வரையறைகளுடன் அனைத்து மின்சார வாகனங்களும் ஒத்திசைய வேண்டிய அவசியமில்லை.

**அட்டவணை I: வாகனம் வெளியேற்றும் மாசு தரங்கள்**

| I | II | III |
|---|---|---|
| இல. | இயைபுமுறை தலைப்பு | மாசு தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |
| 01 | 87.01 | 8701.20.10, 8701.20.20 |
| 02 | 87.03<br>` | பின்வரும் இயைபுமுறைக் குறியீடு நீங்கலாக 87.03 இயைபுமுறை தலைப்பின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள்<br><br>8703.10.19, 8703.10.29, 8703.21.62, 8703.40.21, 8703.40.22, 8703.50.21, 8703.50.22, 8703.60.21, 8703.60.22, 8703.70.21, 8703.70.22, 8703.21.64, 8703.21.73, 8703.40.25, 8703.40.26, 8703.50.25, 8703.50.26, 8703.60.25, 8703.60.26, 8703.70.25, 8703.70.26 |
| 03 | 87.02,87.04,87.05,87.11 | 87.02, 87.04, 87.05, 87.11 இயைபுமுறை தலைப்பின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |

**ஆ. பாதுகாப்பு நடவடிக்கைகள் /தரங்கள்**

3. (அ) அட்டவணை II இன் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்படும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் அனைத்தும் அட்டவணை II இன் நிரல் III இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவாறான பாதுகாப்பு நடவடிக்கைகள்/தரங்களுடன் ஒத்திசைதல் வேண்டும்.

(ஆ) ஏபீஎஸ் (Anti – Locking Breaking System) தொழில்நுட்பமானது அட்டவணை II இன் நிரல் IV இன் 2 (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டு 2020 யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து அகற்றப்பட்ட பயணிகள் வாகனங்களுக்கு ஏற்புடையதாகமாட்டாது.

எவ்வாறாயினும், அதே வகுப்பாக்கத்தின் கீழ் 2020 யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்குப் பின்னர் இலங்கை சுங்கத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது 2020 யூன் 30 ஆந் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட எந்த ஒரு வாகனமும் ஏபீஎஸ் தொழில்நுட்பம் மற்றும் இருக்கைப் பட்டி இரண்டுடனும் ஒத்திசைதல் வேண்டும்.

(இ) ஏபீஎஸ் (Anti – Locking Breaking System) தொழில்நுட்பமானது அட்டவணை II இன் நிரல் IV இன் 3 (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டு 2019 செத்தெம்பர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து அகற்றப்பட்ட சரக்கு வாகனங்களுக்கு ஏற்புடையதாகமாட்டாது.

எவ்வாறாயினும், அதே வகுப்பாக்கத்தின் கீழ் 2019 செத்தெம்பர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்குப் பின்னர் இலங்கை சுங்கத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது 2019 செத்தெம்பர் 01 ஆந் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட கடன் கடிதத்தை (LCs) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட எந்த ஒரு வாகனமும் ஏபீஎஸ் தொழில்நுட்பம் மற்றும் இருக்கைப் பட்டி இரண்டுடனும் இணங்குதல் வேண்டும்.

*அட்டவணை II: பாதுகாப்பு நடவடிக்கைகள்/தரங்கள்*

| *I* | *II* | *III* | | | *IV* |
|---|---|---|---|---|---|
| *இல.* | *இயைபுமுறை தலைப்பு* | *பாதுகாப்பு நடவடிக்கை/ தரங்கள்* | | | *பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள்* |
| | | *காற்றுப் பை* | *இருக்கைப் பட்டி* | *ஏபீஎஸ்* | |
| 01 | 87.02 | C | C | C | 8702.10.12, 8702.10.13, 8702.10.19, 8702.10.21, 8702.10.29, 8702.10.32, 8702.10.33, 8702.10.39, 8702.10.41, 8702.10.49<br><br>8702.20.11, 8702.20.12, 8702.20.19, 8702.20.21, 8702.20.29, 8702.20.31, 8702.20.32, 8702.20.39, 8702.20.41, 8702.20.49<br><br>8702.30.11, 8702.30.12, 8702.30.19, 8702.30.21, 8702.30.29, 8702.30.31, 8702.30.32, 8702.30.39, 8702.30.41, 8702.30.49<br><br>8702.40.11, 8702.40.12, 8702.40.19, 8702.40.21, 8702.40.29, 8702.40.31, 8702.40.32, 8702.40.39, 8702.40.41, 8702.40.49<br><br>8702.90.12, 8702.90.13, 8702.90.19, 8702.90.21, 8702.90.29, 8702.90.32, 8702.90.33, 8702.90.39, 8702.90.41, 8702.90.49 |
| 02(i) | 87.03 | C | C | C | பின்வரும் இயைபுமுறைக் குறியீடுகள் மற்றும் IV ஆம் நிரலின் 2(ii) இயைபுமுறைக் குறியீடுகள் நீங்கலாக 87.03 இயைபுமுறை தலைப்பின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள்;<br><br>8703.10.11, 8703.10.19, 8703.10.21, 8703.10.29<br><br>8703.21.30, 8703.21.40, 8703.21.51, 8703.21.52, 8703.21.53, 8703.21.54, 8703.21.55, 8703.21.62, 8703.21.64, 8703.21.73<br><br>8703.22.30, 8703.22.40, 8703.23.30, 8703.23.40 8703.24.30, 8703.24.40<br>8703.31.30, 8703.31.40, 8703.31.50, 8703.31.60, 8703.32.30, 8703.32.40<br>8703.33.30, 8703.33.40<br><br>8703.40.13, 8703.40.14, 8703.40.15, 8703.40.16, 8703.40.21, 8703.40.22, 8703.40.25, 8703.40.26, 8703.40.33, 8703.40.34, 8703.40.43, 8703.40.44, 8703.40.63, 8703.40.64, 8703.40.83, 8703.40.84 |

*அட்டவணை II: பாதுகாப்பு நடவடிக்கைகள்/தரங்கள் (தொடர்ச்சி)*

| I | II | III | | | IV |
|---|---|---|---|---|---|
| இல. | இயைபுமுறை தலைப்பு | பாதுகாப்பு நடவடிக்கை/ தரங்கள் | | | பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |
| | | காற்றுப் பை | இருக்கைப் பட்டி | ஏபீஎஸ் | |
| | | | | | 8703.50.13, 8703.50.14, 8703.50.15, 8703.50.16, 8703.50.21, 8703.50.22, 8703.50.25, 8703.50.26, 8703.50.33, 8703.50.34, 8703.50.43, 8703.50.44, 8703.50.63, 8703.50.64, 8703.50.83, 8703.50.84<br><br>8703.60.13, 8703.60.14, 8703.60.15, 8703.60.16, 8703.60.21, 8703.60.22, 8703.60.25, 8703.60.26, 8703.60.33, 8703.60.34, 8703.60.43, 8703.60.44, 8703.60.63, 8703.60.64, 8703.60.83, 8703.60.84<br><br>8703.70.13, 8703.70.14, 8703.70.15, 8703.70.16, 8703.70.21, 8703.70.22, 8703.70.25, 8703.70.26, 8703.70.33, 8703.70.34, 8703.70.43, 8703.70.44, 8703.70.63, 8703.70.64, 8703.70.83, 8703.70.84<br><br>8703.80.11, 8703.80.12 |
| 02(ii) | | - | C | * | 8703.21.63, 8703.21.72,8703.40.23, 8703.40.24, 8703.50.23, 8703.50.24, 8703.60.23, 8703.60.24, 8703.70.23, 8703.70.24, 8703.80 (மின்சார நான்கு சக்கர வண்டி)<br><br>*ஏபீஎஸ் தேவைப்பாட்டுக்காக 3(ஆ) ஒழுங்குவிதியினைப் பார்க்க |
| 03(i) | 87.04 | C | C | C | 8704.21.71, 8704.21.72, 8704.21.91, 8704.21.92, 8704.21.93, 8704.21.99, 8704.31.71, 8704.31.72, 8704.31.91, 8704.31.92, 8704.31.93, 8704.31.99 |
| 03(ii) | | - | C | C | பின்வரும் இயைபுமுறைக் குறியீடுகள் மற்றும் IV ஆம் நிரலின் 3(i), 3(iii) இயைபுமுறைக் குறியீடுகள் நீங்கலாக 87.03 இயைபுமுறை தலைப்பின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள்;<br><br>8704.21.21, 8704.21.22, 8704.31.21, 8704.31.22, 8704.31.23, 8704.90.10, 8704.90.20 |
| 03(iii) | | - | C | * | 8704.21.41, 8704.21.42, 8704.21.43, 8704.21.44, 8704.21.61, 8704.21.62 |

*அட்டவணை II: பாதுகாப்பு நடவடிக்கைகள்/தரங்கள்* (தொடர்ச்சி)

| I | II | III | | | IV |
|---|---|---|---|---|---|
| இல. | இயைபுமுறை தலைப்பு | பாதுகாப்பு நடவடிக்கை/ தரங்கள் | | | பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களுக்குட்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |
| | | காற்றுப் பை | இருக்கைப் பட்டி | ஏபீஎஸ் | |
| | | | | | 8704.21.63, 8704.21.64, 8704.21.65, 8704.21.66, 8704.21.67, 8704.21.68<br>8704.31.41, 8704.31.42, 8704.31.43, 8704.31.44, 8704.31.61, 8704.31.62, 8704.31.63, 8704.31.64, 8704.31.65, 8704.31.66, 8704.31.67, 8704.31.68<br><br>* ஏபீஎஸ் தேவைப்பாட்டுக்காக 3(இ) ஒழுங்குவிதியினைப் பார்க்க |
| 04 | 87.05 | - | C | C | 87.03 இயைபுமுறை தலைப்பின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகள் |

(C – பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களுடன் இணக்கம்)

4. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக :

(அ) இயைபுமுறைக் குறியீட்டு அத்தியாயம் 87 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்படக்கூடிய புதிய மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மேலே குறிப்பீடு செய்யப்பட்ட வாகனம் வெளியேற்றும் மாசு தரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களின் இணக்கப்பாட்டுக்கு பயன்வலுக்கொடுக்கும் வகையில் அத்தகைய மோட்டார் வாகனங்களின் தயாரிப்பாளரினால் வழங்கப்பட்ட தயாரிப்பாளர் சான்றிதழினை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட புதிய மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மோட்டார் வாகனங்களின் இறக்குமதி அல்லது புதிய வாகனமொன்றின் இறக்குமதிக்கான தயாரிப்பாளர் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க முடியாத வழங்குநர் ஒருவர் குறித்த மோட்டார் வாகனங்கள் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட வாகனம் வெளியேற்றும் மாசு தரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் / தரங்களின் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்த காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 03 ஆந் திகதிய 1804/17 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியினால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை முகவரினால் விநியோகிக்கப்பட்ட கப்பலேற்றுவதற்கு முன்னரான பரிசோதனை சான்றிதழொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தயாரிப்பாளரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை முகவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்கு முரணாக பிழையான விடயங்களைக் கொண்டிருப்பது கண்டறியப்படும் சந்தர்ப்பத்தில், கட்டுப்பாட்டாளர் நாயகம் அத்தகையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்கு முரணாக இறக்குமதியாளர் போலியான சான்றிதழொன்றினைச் சமர்ப்பித்துள்ளமை கண்டறியப்படும் சந்தர்ப்பத்தில், கட்டுப்பாட்டாளர் நாயகம் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனத்திற்கொள்தல் வேண்டும்.

5. தயாரிப்பாளர் சான்றிதழ் மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னரான பரிசோதனைச் சான்றிதழ், செல்லுபடியான கடன் கடிதங்கள் திறக்கப்பட்ட உள்நாட்டு வங்கிக்கு பயன்பெறுநரினால் / பேரம்பேசும் வங்கியின் மூலம் நேரடியாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

6. இயைபுமுறைக் குறியீட்டு முறைமையின் அத்தியாயம் 87 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி, அத்தகைய மோட்டார் வாகனங்களின் கப்பலேற்றலுக்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள கடன் கடிதத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மாசு தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தரங்கள் என்பன மோட்டார் வாகனங்களின் இறக்குமதி நோக்கத்திற்கான ஏதேனும் கடன் கடிதங்களை தாபிப்பதற்கான ஒத்திசைவுக்கு கட்டாய தேவையாக இருத்தல் வேண்டும்.

7. மேற்குறித்த வாகனம் வெளியேற்றும் மாசு தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் /தரங்களுடன் ஒத்திசையாத மோட்டார் வாகனங்கள் இறக்குமதியாளரின் சொந்த செலவில் மீள் ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும்.

8. 1956 நவெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட பழங்கால வாகனங்களுக்கு வாகனம் வெளியேற்றும் மாசு தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் /தரங்களுடன் ஒத்திசைவு தேவைப்படுத்தப்படமாட்டாது.

9. எவரேனும் நபருக்கு அல்லது இறக்குமதிக்கு மேற்படி ஒழுங்குவிதிகளின் ஏற்புடமை தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுத்) திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் அவரது தற்றுனிபின் பிரகாரம் ஒழுங்குவிதிகளின் ஏற்புடமை பற்றிய இறுதித் தீர்மானத்தை எடுக்கமுடியும்.

**குறிப்பு :**

1. **இருக்கைப் பட்டி** - இருக்கைப் பட்டியினைப் பொருத்தவரை, சாரதி மற்றும் முன்ஆசன பயணிகள் மூன்று புள்ளி இருக்கைப் பட்டிகளையும் ஏனைய பயணிகள் ஆகக்குறைந்தது இரண்டு புள்ளி இருக்கைப் பட்டிகளையும் கொண்டிருப்பது ஏற்புடையதாகும்.

2. **காற்றுப் பைகள்** - சாரதி மற்றும் முன்ஆசன பயணிகள் தரநிலை காற்றுப் பைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. (ABS) **ஏபீஎஸ்** - அனைத்து வாகனங்களும் அன்டி - லொக்கிங் பிரேகிங் சிஸ்டத்துடன் (Anti – Locking Breaking System) தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

02-399

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.